# விடியல்

The Dawn

*மாத இதழ், பொழுது – 27*
*ஜுலை, 2011*
*vidiyalmagazhine.blogspot.com*
*vidiyalmagazhine@gmail.com*



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
***www.ksrcasthamizh.blogspot.com***
***www.ksrcas.edu***


# உள்ளடக்கம்

## குறுங்கட்டுரைகள்


*ஆவாரம்பூ* 02, ஆடாதெடை 17
*நூல்களால் வாழ்பவர்* 05,
*மின்னல்* 07,
*உணவே மருந்து* 18,
*மலர்மணம்* 20,


## கட்டுரைகள்


*கவிமணி* 02
*ஜார்ஜ் பெர்னாட்ஷா* 09
*மறைமலையடிகள்* 11
*முத்துலட்சுமி ரெட்டி* 14
*பரிதிமாற்கலைஞர்* 16


## கவிதைகள்


*முகவரியைத்தேடி* 19
*கருவறையில் என் உலகம்* 20


## துளிச்செய்திகள்


*அறுசுவை* 04, *ஒருசெய்தி* 10


## மாதம் ஒரு படைப்பாளர்


*எழுத்தாளர் த. ஜெயகாந்தன்* 05


▼

| *பின் அட்டை ஓவியம்* |
|---|
| சௌந்தர்யா<br>இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை |

# ஆவாரம் பூ

**திருமதி. லோ. புனிதவள்ளி**
தமிழ் விரிவுரையாளர்

நோய் நீக்கும் பூ வகைகளில் ஆவாரம் பூ முதன்மையானது.

இதை உணவுப் பாகமாகச் செய்து அவ்வப்போது உண்டு வர உடல் பொன்னிறமாக மாறும்.

சில பேர்களுடைய உடம்பில் உப்பு பொரிந்தாற்போல் இருக்கும். தோலில் வறட்சி இருக்கும். வேர்வை வரும்போது கற்றாழை நெடியடிக்கும். அவ்வப்போது நா வறட்சி ஏற்படும்.

இப்பிணிகளைப் போக்குவதில் ஆவாரம் பூ சிறந்து விளங்குகின்றது. இது குறித்த பாடல் வருமாறு:

***"தங்கம் எனவே சடத்திற்குக் காந்தி தரும்***
***மங்காத நீரை வறட்சிகளை – அங்கத்தாம்***
***மாவைக் கற்றாழை மணத்தை அகற்றிவிடும்***
***பூவைச் சேர் ஆவாரம் பூ"***

இதை வதைக்கி இரவில் துயில்வதற்கு முன் கண்களில் வைத்துக் கட்டினால் கண்நோய்கள் நீங்கும்.

∆

# கவிமணி

**டி. பூபாலன்,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை



சிவதானுப்பிள்ளை, ஆதிலட்சுமி தம்பதியர்க்கு இரண்டு பெண் குழந்தைகளை அடுத்து மூன்றாவதாக தேசிக விநாயகம் பிறந்தார். இரண்டு பெண்களுக்கு பின் பிறந்த ஆண் மகவுக்கு தான் வணங்கும் தேசிக விநாயகரின் பெயரையே வைத்தார் சிவதானுப் பிள்ளை. ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார்.

எப்.ஏ. படித்த கவிமணி பின் ஆசிரியர் பயிற்சி படித்து தான் படித்த பள்ளியிலேயே ஆசிரியர் ஆனார். உமையம்மை எனும் பெண்ணை 1901 இல் மணம் முடித்தார். நாஞ்சில் நாட்டார் தன் மனைவியை குட்டி, பிள்ளாய் என்று அழைத்து கொண்டிருந்த நாட்களில் கவிமணி

தன் மனைவியை தாயி என்று மரியாதையுடன் அழைப்பார். குழந்தைப்பேறு இல்லாத கவிமணி தனது அக்காள் மகன் சிவதானுவை தனது மகன் போலவே வளர்த்தார்.

### மொழிபெயர்ப்பாளர்

எட்வின் ஆர்னால்டின் “ஆசிய ஜோதி“யைத் தமிழில் தழுவி எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.

### ஆராய்ச்சியாளர்

ஆராய்ச்சித் துறையிலும் தேசிக விநாயகம் பிள்ளை பல அரிய பணிகளை ஆற்றியிருக்கிறார். 1922-இல் ‘மனோன் மணியம் மறுபிறப்பு’ என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார். கம்பரா மாயணம் திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார். “காந்தளூர்ச் சாலை“ பற்றிய ஆய்வு நூலை எழுதினார்.

### விருதுகள்

24 டிசம்பர் 1940இல் சென்னை பச்சைப்பன் கல்லூரியில் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் கவிமணி என்ற பட்டம் வழங்கினார். 1943இல் அண்ணாமலை அரசர் ஆத்தங்குடியில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பெரும் பொருள் வழங்க முன் வந்தபோது அதை வாங்க மறுத்து விட்டார். 1952 இல் கவிமணிக்கு தேரூரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டது. அக்டோபர் 2005இல் இந்திய அரசு முத்திரை வெளியிட்டுச் சிறப்பித்தது.

### கவிமணியின் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்வுகள்

கல்கி எழுதி சிவாஜி கணேசன் நடித்த கள்வனின் காதலி என்ற படத்தில் ”வெயிற்கேற்ற நிழலுண்டு வீசும் தென்றல் காற்றுண்டு” எனும் கவிமணியின் பாடலைப் பயன்படுத்திக் கொண்டனர். அதற்கு கொடுப்பதற்காக ஒரு பெருந் தொகையை எடுத்துக்கொண்டு சின்ன அண்ணா மலையும் சிவாஜி கணேசனும் கவிமணியைச் சந்திக்க அவரது இல்லமான புத்தன் சந்தைக்குச் சென்றனர்.

அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த கவிமணி சிவாஜியைப் பார்த்து தம்பி யார் என்று கேட்டார். பதட்டத்துடன் சின்ன அண்ணாமலை இவர்தான் சிவாஜி கணேசன் என்று சொல்லவும் கவிமணி அப்படியா தம்பி என்ன

செய்து கொண்டிருக்கிறார் என்று கேட்டார்.

கவிமணிக்கு சினிமா பார்க்கும் பழக்கம் இல்லை. அதனால் அவருக்கு சிவாஜி கணேசனைத் தெரியவில்லை. பாடலுக்காக ஒரு பெருந்தொகையை சிவாஜி கொடுக்கவும் அதை வாங்க மறுத்து இந்த பாடல் நான் எப்போதோ எழுதியது அதற்கு இது தேவை இல்லை தம்பி என்று மறுத்து விட்டார் கவிமணி. கலைவாணரின் முயற்சியால் கவிமணி யின் பாடல்கள் பைத்தியக்காரன், மணமகள், முதல்தேதி போன்ற படங்களில் இடம் பெற்றது.

ஒருமுறை ம.பொ.சி கவிமணியைச் சந்தித்துவிட்டு செல்லும்போது என்னை மறந்து விடாதீர்கள் என்றார் அதற்கு கவிமணி எப்படி மறப்பது எல்லோருக்கும் முகத்தில் மீசை இருக்கும் உங்களுக்கோ மீசையில் அல்லவா முகம் இருக்கிறது என்று சொல்லி எல்லோரையும் சிரிக்க வைத்தார்.

ஒருமுறை நாதஸ்வர வித்வான் டி. என். ராஜரத்தினம் பிள்ளை கவிமணியை சந்திக்க சென்றார். அப்போது இருவருக்கும் குளிர்பானம் வந்தது. அப்போது கவிமணி ஸ்ட்ராவைக் காட்டி எப்போதும் நாதஸ்வரம் ஊதுவீர்கள் தற்போது இதை ஊதுங்கள் என்று நகைச்சுவையாகக் கூறி அனைவரையும் சிரிக்க வைத்தார் கவிமணி.

**கவிமணியின் நூல்கள்**

1. ஆசிய ஜோதி, (1941)
2. மலரும் மாலையும், (1938)
3. மருமக்கள்வழி மான்மியம், (1942)
4. கதர் பிறந்த கதை, (1947)
5. உமார் கய்யாம் பாடல்கள், (1945)
6. தேவியின் கீர்த்தனங்கள்,
7. குழுந்தைச்செல்வம்,
8. கவிமணியின் உரைமணிகள்,

**ஜுலை 28ஆம்நாள்**
**கவிமணி அவர்களின்**
**பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றது**

∆

# அறுசுவை

**க. மலர்விழி,**
முதலாண்டு தமிழ்த்துறை

**இனிப்பு** – வளத்தையும்,

**துவர்ப்பு** – ஆற்றலையும்,

**கைப்பு** –மென்மையையும்,

**கார்ப்பு** – உணர்வையும்,

**உவர்ப்பு** – தெளிவையும்,

**புளிப்பு** – இனிமையையும்

உண்டாக்கும் என்பர்.

∆

# நூல்களால் வாழ்பவர்

*"தமிழுக்குத் தொண்டு செய்தோன்*
*செத்ததில்லை -*
*தமிழ்த்தொண்டும் செத்ததில்லை"*

என்று பாரதியார் கூறியிருப்பதற்கு ஏற்ப தான் வாழும் காலத்தில் ஏதேனும் சாதனைகள் செய்தால் அது வாழும் காலத்திலும் வாழ்ந்து முடிந்த காலத்திலும் நீட்டித்து வாழும். அவ்வகையில் பிரமிக்க வைக்கும் எழுத்தாளர் ***ஜார்ஜ் குருனிட்ஸ்*** ஆவார்.

இவர் ஜெர்மன் நாட்டைச் சார்ந்தவர். இவர் 1828ஆம் ஆண்டுமுதல் 1886ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார். இவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை ஒரு மனிதனால் இவ்வளவு நூல்கள் எழுதமுடியுமா என்ற வியப்பை ஏற்படுத்துகின்றது.

இவர் எழுதிய மொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கை 438 ஆகும். இவர் தன் நூல்களால் இன்றும் இந்த உலகத்தில் வாழ்ந்து வருகின்றார்.

**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்.

∆

மாதம் ஓர் எழுத்தாளர்

# ஜெயகாந்தன்

**முனைவர் ப. சரவணன்,**
தமிழ்த்துறை விரிவுரையாளர்

ஜெயகாந்தன் 1934ஆம் ஆண்டு கடலூரில்இ ஒரு வேளாண் குடும்பத்தில் பிறந்தார். பள்ளிப்படிப்பில் நாட்டம் இல்லாமையால் ஐந்தாம் வகுப்பிலேயே பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். உலகியல் அனுபவம் பெறவேண்டி வீட்டை விட்டு வெளியேறி விழுப்புரம் சென்றார். அங்கு அவர் மாமாவின் மேற் பார்வையில் வளர்ந்தார். அவர் ஜெயகாந்தனைப் பொதுவுடைமைக் கோட்பாடுகளுக்கும் பாரதியின் எழுத்துக் களுக்கும் அறிமுகப் படுத்தினார்.

ஜெயகாந்தன் சில ஆண்டுகள் விழுப்புரத்தில் வாழ்ந்த பின் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். அங்கு பெரும்பாலான நேரத்தை சி.பி.ஐ-யின் ஜனசக்தி அலுவலக அச்சகத்தில் பணிபுரிந்தும்இ ஜனசக்தி இதழ்கள் விற்றும் கழித்தார். 1949-ஆம் ஆண்டு சி.பி.ஐ மீதும் அதன் உறுப்பினர்கள் மீதும் தடை போடப் பட்டது. ஆதலால் சில திங்கள்கள் தஞ்சையில் காலணிகள் விற்கும் கடை ஒன்றில் பணிபுரிந்தார்.

இந்த எதிர்பாராத இடைவேளை அவர் வாழ்க்கையில் முதன்மையான கால கட்டமாக அமைந்தது. அவர் சிந்திக்கவும் எழுதவும் அப்பொழுது நேரம் கிடைத்தது. இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டில் முக்கிய அரசியல் மாற்றங்களும் நேர்ந்தன. தி.மு.க மற்றும் தி.க.-வின் வளர்ச்சியால் சி.பி.ஐ மெதுவாக மறையத் துவங்கியது. உட்கட்சிப் பூசல்களினாலும் கட்சியுடன ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினாலும் ஜெய காந்தன் சி.பி.ஐ-யிலிருந்து விலகினார். பின்னர் காமராசருடைய தீவிரத் தொண்டனாக மாறிஇ தமிழகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

அவரது இலக்கிய வாழ்க்கை 1950களில் தொடங்கியது - சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்ற ஏடுகளில் இவரது படைப்புகள் வெளியாயின. படைப்பு களுக்குப் புகழும் அங்கீகாரமும் கிடைத்தன.

இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப் பெற்றார். ஜெயகாந்தன் சில ஆண்டுகள் தமிழ்த் திரையுலகிலும் வலம் வந்தார். இவரது நாவல்களான உன்னைப் போல் ஒருவன் மற்றும் சில நேரங்களில் சில மனிதர்கள் ஆகியவை படமாக் கப்பட்டன. இதில் உன்னைப் போல் ஒருவன் சிறந்த மாநில மொழித் திரைப்படத்திற்கான குடியரசுத் தலைவர் விருதில் மூன்றாம் விருதைப் பெற்றது. மேலும் அவருக்கும் ஒரு நடிகைக்கும் ஏற்பட்ட உறவே ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் என்ற புதினமாக உருப் பெற்றது.

### தன் வரலாறு நூல்கள்

ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் (அக்டோபர் 1974 )

ஓர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள் (செப்டம்பர் 1980 )

ஓர் இலக்கியவாதியின் பத்திரிகை அனுபவங்கள் (டிசம்பர் 2009)

### வாழ்க்கை வரலாறு

வாழ்விக்க வந்த காந்தி 1973 (ரொமெயின் ரொலேண்ட்டின் ∴ப்ரெஞ்சு மொழியில் வந்த காந்தியின் தன்வரலாற்றின் தமிழாக்கம் )

ஒரு கதாசிரியனின் கதை (மே 1989 (பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு)

### நாவல்கள் மற்றும் குறுநாவல்கள்

1.வாழ்க்கை அழைக்கிறது (ஆகஸ்ட் 1957)

2.கைவிலங்கு (ஜனவரி 1961)

3.யாருக்காக அழுதான்? (பெப்ரவரி 1962)

4.பிரம்ம உபதேசம் (மே 1963)

5.பிரியாலயம் (ஆகஸ்ட் 1965)
6.கருணையினால் அல்ல (நவம்பர்1965)
7.பாரீசுக்குப் போ! (டிசம்பர் 1966)
8.கோகிலா என்ன செய்துவிட்டாள்? (நவம்பர் 1967)
9.சில நேரங்களில் சில மனிதர்கள் (ஜூன் 1970)
10.ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் (ஜனவரி 1971)
11.ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் (ஏப்ரல் 1973)
12.ஜெய ஜெய சங்கர... (செப்டம்பர் 1977)
13.கங்கை எங்கே போகிறாள் (டிசம்பர் 1978)
14.ஒரு குடும்பத்தில் நடக்கிறது... (ஜனவரி 1979)
15.பாவம், இவள் ஒரு பாப்பாத்தி! (மார்ச் 1979)
16.எங்கெங்கு காணினும்... (மே 1979)
17.ஊருக்கு நூறு பேர் (ஜூன் 1979)
18.கரிக்கோடுகள் (ஜூலை 1979)
19.மூங்கில் காட்டினுள்ளே (செப்டம்பர் 1979)
20.ஒரு மனிதனும் சில எருமை மாடுகளும் (டிசம்பர் 1979)
21.ஒவ்வொரு கூரைக்கும் கீழே...(ஜனவரி 1980)
22.பாட்டிமார்களும் பேத்திமார்களும் (ஏப்ரல் 1980)
23.அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள் (ஆகஸ்ட் 1980)
24.இந்த நேரத்தில் இவள்... (1980)
25.காத்திருக்கா ஒருத்தி (செப்டம்பர் 1980)
26.காரு (ஏப்ரல் 1981)
27.ஆயுத பூசை (மார்ச் 1982)
28.சுந்தர காண்டம் (செப்டம்பர் 1982)
29.ஈஸ்வர அல்லா தேரே நாம் (ஜனவரி 1983)
30.ஓ, அமெரிக்கா! (பெப்ரவரி 1983)
31.இல்லாதவர்கள் (பெப்ரவரி 1983)
32.இதய ராணிகளும் ஸ்பெடு ராஜாக்களும் (ஜூலை 1983)
33.காற்று வெளியினிலே...(ஏப்ரல் 1984)
34.கழுத்தில் விழுந்த மாலை (செப்டம்பர் 1984)
35.அந்த அக்காவினைத்தேடி... (அக்டோபர் 1985)
36.இன்னும் ஒரு பெண்ணின் கதை (ஜூலை 1986)
37.ரிஷிமூலம் (செப்டம்பர் 1965)
38.சினிமாவுக்குப் போன சித்தாளு (செப்டம்பர் 1972)
39.உன்னைப் போல் ஒருவன்
40.ஹர ஹர சங்கர (2005)
41.கண்ணன்(2011)
42.ஜதொகுஸசிறுகதைகள் தொகுப்பு
43.ஒரு பிடி சோறு (செப்டம்பர் 1958)
44.இனிப்பும் கரிப்பும் (ஆகஸ்ட் 1960)
45.தேவன் வருவாரா (1961)

46.மாலை மயக்கம் (ஜனவரி 1962)

47.யுகசந்தி (அக்டோபர் 1963)

48.உண்மை சுடும் (செப்டம்பர் 1964)

49.புதிய வார்ப்புகள் (ஏப்ரல் 1965)

50.சுயதரிசனம் (ஏப்ரல் 1967)

51.இறந்த காலங்கள் (பெப்ரவரி 1969)

52.குருபீடம் (அக்டோபர் 1971)

53.சக்கரம் நிற்பதில்லை (பெப்ரவரி 1975)

54.புகை நடுவினிலே... (டிசம்பர் 1990)

55. சுமைதாங்கி, 56. பொம்மை.

**கட்டுரைகள்**

பாரதி பாடம், இமயத்துக்கு அப்பால்

**திரைப்படமாக்கப்பட்ட இவருடைய கதைகள்**

சில நேரங்களில் சில மனிதர்கள் (இயக்குநர் : பீம்சிங்), ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் (இயக்குநர்: பீம்சிங்), ஊருக்கு நூறு பேர் (இயக்குநர் : லெனின்), உன்னைப் போல் ஒருவன், யாருக்காக அழுதான், புதுச் செருப்பு

**ஜெயகாந்தன் இயக்கிய திரைப்படங்கள்**

உன்னைப் போல் ஒருவன், யாருக்காக அழுதான்

**ஜெயகாந்தன் பெற்ற விருதுகள்**

சாகித்திய அகாதமி விருது, 2002ஆம் ஆண்டுக்கான ஞான பீட விருது, 2009ஆம் ஆண்டின் இலக்கியத் துறைக்கான பத்ம பூஷன் விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

∆

# மின்னல்

**ஜெ. பாரதி,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை

காற்று மண்டலத்தில் நைட்ரஜன் அதிக அளவு காணப்பட்டாலும் தாவரங்களால் நைட்ரஜனை வாயு நிலையில் பயன்படுத்த முடிவதில்லை. இவை மண்ணில் இருந்து பெருமளவில் நைட்ரேட் அயன் களாகவே உறிஞ்சிக் கொள்கின்றன.

காற்று மண்டலத்தில் உள்ள நைட்ரஜன் வாயுவைத் தாவரங்கள் உறிஞ்சக் கூடிய பதத்தில் அயன்களாக மாற்றிக் கொடுக்கும் வேலையைத்தான் மின்னல் செய்கின்றது.


பூமியின் முதன் முதலில் உயிரினங்கள் தோன்றுவதற்கும் மின்னல்தான் காரணம். காற்று மண்டலத்தின் வழியாகப் பாய்ந்த மின்னல் வாயுக்களைச் சேர்த்து அமினோ அமிலங்களை உருவாக் கியது. இவைதான் உயிர்க்கலங்களில் உள்ள புரதங்களின் ஆக்கக்கூறுகளாக வேலை செய்கின்றன.

**நன்றி : 'ஆரிஜின் ஆப் லைப்' நூல்.**

∆

# ஜார்ஜ் பெர்னாட்ஷா

**வி.ஜி. சந்தோஷ்ராஜ்,**
இரண்டாமாண்டு உயிர்த்தொழில்நுட்பவியல்



ஜார்ஜ் பெர்னாட்ஷா (1856 ஆம் ஆண்டு ஜூலை 26 - 1950 ஆம் ஆண்டு நவம்பர் 2 ) ஒரு அயர்லாந்து நாடக ஆசிரியராவார். இசை மற்றும் இலக்கிய விமர்சனமே அவரது முதல் இலாபத் தன்மை கொண்ட எழுத்துப் படைப்புகள் ஆகும். அதில் தனது திறனைக் கொண்டு மிக நேர்த்தியான பத்திரிகைப் படைப்புகள் பலவற்றை எழுதினார். அவரது பிரதான திறமை நாடகமே ஆகும். மேலும் அவர் 60க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.

அவரது அனைத்து எழுத்துப் படைப்புகளும் சமூகத்தில் பெரு வாரியாக நிலவிவரும் சிக்கல் களைப் பற்றியதாகவே இருக்கும். ஆனால் அவற்றின் மிக முக்கிய கருப்பொருள்களை மிகவும் மனதால் ஏற்றுக்கொள்ளும் படி மாற்றுவதற்கு அவற்றில் ஒரு நகைச்சுவை அம்சமும் இழையோடிய படி இருக்கும். கல்வி, திருமணம், மதம், அரசாங்கம், உடல்நலம் மற்றும் சாதிப்பாகுபாடு ஆகிய அனைத் தையும் பெர்னாட்ஷா ஆராய்ந்தார்.

உழைக்கும் வர்க்கத்தினர் சுரண்டப்படுவதை உணர்ந்து அவர் மிகுந்த கோபம் கொண்டார். மேலும் அவரது பெரும்பாலான படைப்புகள் அந்த சுரண்டலைக் கடுமையாகத் தாக்கி விமர்சனம் செய்தன. ஒரு தீவிர சமூகவாதியாக ∴பேபியன் சொசைட்டிக்காக (Fabian Society) பெர்னாட்ஷா பல சிற்றேடுகளை எழுதி சொற்பொழிவுகளை நிகழ்த் தினார். விரைவில் அதற்குக் காரணமாக விளங்கும் ஆணுக்கு சமமான பெண்ணுரிமையைப் பெறுதல், உழைக்கும் வர்க்கத்தினர் சுரண்டப்படுவதை ஒழித்தல், உற்பத்தி நிலங்களின் தனியார் உரிமையை மீட்டல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பரப்புதல் ஆகியவை தொடர்பான சொற்பொழிவுகளை நிகழ்த்தும் சொற்பொழிவாளரானார்.

பெர்னாட்ஷா, சார்லோட் பாய்னெ-டௌன்செண்ட் (Charlotte Payne-Townshend) என்ற சமூக சீர்திருத்தவாதியைத் திருமணம் செய்து கொண்டு அவருடனே வாழ்ந்தார். அவர்கள் ஷாஸ்வ்ஸ் கார்னர் (Shaw's Corner) என்று இன்று அழைக்கப்படும் ஆயோட் செயிண்ட். லாரன்ஸில் (Ayot St. Lawrence) உள்ள வீட்டில் வசித்துவந்தனர்.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு (1925) மற்றும் ஆஸ்கார் (1938) விருது ஆகிய இரண்டையும் பெற்றவர் இவர் ஒருவரே. அவர் இவ்வெகுமதிகளை முறையே இலக்கியத்திற்கான அவரது பங்களிப்புக்காகவும் பிக்மேலியன் என்னும் திரைப்படத்தின் பணிக்காகவும் பெற்றார்.

வெகுமதிகளுக்கான ஆசை தனக்கு இல்லை என்பதால் பெர்னாட்ஷா உடனடியாக நோபல் பரிசை நிராகரிக்க வேண்டும் என நினைத்தார். ஆனால் அவரது மனைவியின் வேண்டுகோள் படி ஏற்றுக்கொண்டார்: அவரது மனைவி அதை அயர்லாந்துக்கு கௌரவம் எனக் கருதினார். பரிசுத் தொகையை அவர் நிராகரித்து அதை ஸ்வீடிஸ் புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற் கான நிதியாக அதைப் பயன்படுத்திக் கொள்ளக் கோரினார்.

**இறுதி வருடங்கள்**

அவரது இறுதி ஆண்டுகளில் பெர்னாட்ஷா, ஷாஸ்வ்ஸ் கார்னரின் மாநாடுகளுக்குச் செல்வதன் மூலம் மகிழ்ந்தார். அவர் தனது 94 ஆம் வயதில் மரம் வெட்டும் போது கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்களி னால் உருவான சிறுநீரக செயலிழப்பால் ஏற்பட்ட வீழ்ப் படிவுகளால் இறந்தார்.ஜ12ஸ அவரது சாம்பலும் அவரது மனைவியின் சாம்பலும் அவர்களது தோட்டத்தில் இருந்த செயிண்ட் ஜோன் சிலைக்கு அருகிலும் அதன் நடை பாதைகளைச் சுற்றிலும் தூவப்பட்டது.

**ஜுலை 26ஆம்நாள்**
**ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்களின்**
**பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றது**

∆

## ஒரு செய்தி

"குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம் போல வீடுகட்டுப்பாட்டுத்திட்டம் கொண்டு வந்தால் காடு வயலாகாது - வயல் வீட்டடிமனையாகாது. காட்டைச்சுருக்கி வீட்டைப் பெருக்கவேண்டாமே!"

**சி. அருண்குமார்**
**முதலாண்டு வேதியியல்**

# மறைமலையடிகள்

**வி. நவீன்ராஜு,**
இரண்டாமாண்டு உயிர் வேதியியல்



மறைமலை அடிகளின் இயற்பெயர் வேதாசலம். இவர் 1876 சூலை 15 ஆம் நாள் மாலை 6.35க்குப் திருக்கழுக்குன்றத்திலே பிறந்தார்.

இவர் தந்தையார் சொக்கநாதர், தாயார் சின்னம்மையார். தந்தையார் நாகப் பட்டினத்தில் அறுவை மருத்துவராய் பணியாற்றி வந்தார். பல்லாண்டுகள் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்து திருக்கழுக்குன்றம் சிவன் வேதாசல ரையும், அம்மை சொக்கம் மையையும் வேண்டி நோன்பிருந்து பிள்ளைப்பேறு பெற்றதால், தம் பிள்ளைக்கு **வேதாசலம்** என்று பெயரிட்டார்.

பின்னர்த் தனித்தமிழ்ப்பற்று காரணமாக 1916இல் தம் பெயரை மறைமலை (வேதம் - மறை, அசலம் - மலை) என்று மாற்றிக்கொண்டார்.

அவருக்குப் பின் 4 தம்பிமாரும் (திருஞான சம்பந்தம், மாணிக்க வாசகம், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி ஆகியோர்) 2 தங்கைமாரும் (நீலாம்பிகை, திரிபுரசுந்தரி ஆகியோர்) பிறந்தனர். மறைமலைஅடிகள், நாகையில் வெஸ்லியன் மி'ன் கல்லூரியைச் சேர்ந்த உயர்நிலைப்பள்ளியில் நான்காம் படிவம் வரை படித்தார்.

அவருடைய தந்தையாரின் மறைவு காரணமாக அவரால் பள்ளிப்படிப்பைத் தொடர முடிய வில்லை. ஆனால், தமிழ்ப் புலமை மிகுந்த நாராயணசாமி பிள்ளை என்பவரிடம் தமிழ் கற்றார். “சைவ சித்தாந்த சண்டமாருதம்“ என்று புகழ் பெற்றிருந்த சோமசுந்தர நாயக்கரிடம் சைவ சித்தாந்தம் கற்றார்.

சென்னைக்கு வந்த பின்னர்க் கிறித்தவக் கல்லூரியில் வீ.கோ. சூரியநாராயண சாத்திரியாருடன் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பல ஆண்டுகள் பேராசிரியராகப் பணி யாற்றியபின், பல்லாவரத்தில்

இராமலிங்கரின் கொள்கைப்படி 1905 இல் சைவ சித்தாந்த மகா சமாஜம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். அதன் மாநாட்டுத் தலைமையையும் ஏற்றார்.

**திருமுருகன்** அச்சுக்கூடத்தை ஏற்படுத்திப் பல நூல்களை வெளியிட்டார். மணிமொழி நூல் நிலையம் என்னும் நூல் நிலையத்தை உருவாக்கினார்.

இவர் காலத்தில் பல புகழ் பெற்ற தமிழறிஞர்கள் வாழ்ந்தனர். மனோன் மணீயம் இயற்றிய சுந்தரனார், பெரும்புலவர் கதிரைவேலர், திரு. வி. கலியாணசுந்தரனார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், தணிகைமணி வ.சு.செங்கல்வராயர், ரசிகமணி டி. கே. சிதம்பரநாதர், பேராசிரியர் ச. வையபுரியார், கோவை இராமலிங்கம், சுப்பிரமணிய பாரதியார், மீனாட்சி சுந்தரனார், பொத்தக வணிகரும் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனாரின் ஆசிரியரும் ஆன நாராயணசாமி, “சைவசித்தாந்த சண்டமாருதம்“ என்று புகழப்பட்ட சோமசுந்தர நாயகர், என்று பலர் வாழ்ந்த காலம்.

### தனித்தமிழ் ஆர்வம்

அருட்பா-மருட்பா போர், சமயத் தொண்டுகள், இந்தி எதிர்ப்பு

### படைத்த நூல்கள்

1.பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் (1921)
2.மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை, இரு தொகுதிகள் (1933)
3.மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி (1927)
4.யோக நித்திரை: அறிதுயில் (1922)
5.தொலைவில் உணர்தல் (1935)
6.மரனத்தின்பின் மனிதர் நிலை (1911)
7.சாகுந்தல நாடகம் (சமசுகிருதத்தில் இருந்து மொழி பெயர்த்தது) (1907)
8.சாகுந்தல நாடக ஆராய்ச்சி (1934)
9.ஞானசாகரம் மாதிகை (1902)
10.Oriental Mustic Myna Bimonthly (1908-1909)
11.Ocean of wisdom> Bimonthly(1935)
12.Ancient and Modern Tamil Poets (1937)
13.முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் (1936)
14.முல்லைப்பாட்டு- ஆராய்ச்சியுரை (1903)
15.பட்டினப்பாலை (1906)
16.முதற்குறள் வாத நிராகரணம் (1898)
17.திருக்குறள் ஆராய்ச்சி (1951)

18.முனிமொழிப்ப்ரகாசிகை (பாடல்கள்) (1899)

19.மறைமலையடிகள் பாமணிக் கோவை (பாடல்கள்) (1977)

20.அம்பிகாபதி அமராவதி (நாடகம்) (1954)

21.கோகிலாம்பாள் கடிதங்கள் (புதினம்) (1921)

22.குமுதவல்லி: அல்லது நாகநாட்டரசி (புதினம்) (1911)

23.மறைமலை அடிகள் கடிதங்கள் (1957)

24.அறிவுரைக் கொத்து (1921)

25.அறிவுரைக் கோவை (1971)

26.உரைமணிக் கோவை (1972)

27.கருத்தோவியம் (1976)

28.சிந்தனைக் கட்டுரைகள் (1908)

29.சிறுவற்கான செந்தமிழ் (1934)

30.இளைஞர்க்கான இன்றமிழ் (1957)

31.திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை (1900)

32.மாணிக்க வாசகர் மாட்சி (1935)

33.மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் (இரு தொகுதி) (1930)

34.மாணிக்க வாசகர் வரலாறு (1952)

35.சோமசுந்தரக் காஞ்சியாக்கம் (1901)

36.சோமசுந்தர நாயகர் வரலாறு (1957)

37.கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா (1968)

38.திருவாசக விரிவுரை (1940)

39.சித்தாந்த ஞான போதம், சதமணிக்கோவை குறிப்புரை (1898)

40.துகளறு போதம், உரை (1898)

41.வேதாந்த மத விசாரம் (1899)

42.வேத சிவாகமப் பிராமண்யம் (1900)

43.Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge (1940)

44.சைவ சித்தாந்த ஞானபோதம் (1906)

45.சிவஞான போத ஆராய்ச்சி (1958)

46.Can Hindi be a lingua Franca of India? (1969)

47.இந்தி பொது மொழியா ? (1937)

48.சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் (1913)

49.Tamilian and Aryan form of Marriage (1936)

50.தமிழ் நாட்டவரும், மேல்நாட்டவரும் (1936)

51.பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் (1958)

52.வேளாளர் நாகரிகம் (1923)

53.தமிழர் மதம் (1941)

54.பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் (1906)

ஆகிய 54 நூல்களை எழுதியுள்ளார்.

**ஜூலை 7ஆம்நாள்**
**மறைமலையடிகள் அவர்களின்**
**பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றது**

Δ

# முத்துலட்சுமி ரெட்டி

**மூ. வெண்ணிலா,**
இரண்டாமாண்டு உயிர் வேதியியல்



புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருக்கோகர்ணம் என்ற இடத்தில் கவுரவமான ஒரு குடும்பத்தில் 1886-ஆம் ஆண்டு. நாராயண சாமி, சந்திரம்மாள் தம்பதியருக்குப் பிறந்தார் முத்துலட்சுமி இவர் உடன் பிறந்தவர்கள் சுந்தரம்மாள், நல்லமுத்து என்று இரண்டு தங்கைகள், இராமையா என்று ஒரு தம்பியும் ஆகும்.

**திருமணம்**

திருமணத்தில் ஆர்வம் இல்லை. அவருடைய விருப்பமெல்லாம் படிப்பிலும், சமூகப் பணியிலுமே இருந்தது. இருப்பினும் சகோதர, சகோதரிகளின் வாழ்க்கையை மனதில் கொண்டு திருமணத்திற்கு சம்மதித்தார்.

அவருடைய கணவர் டி. சுந்தரரெட்டி அடையாறில் அன்னிபெசன்ட் (Anni Besant) அம்மையாரால் நிறுவப்பட்ட பிரம்மஞான சபையில், மூட நம்பிக்கைகள், அர்த்தமற்ற சடங்குகள் ஆகியவற்றைத் தவிர்த்து திருமணங்களை நடத்தி வந்தனர்.

அங்கே முத்துலடசுமி-சுந்தரரெட்டி திருமணம் 1914ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் நடந்தது. இவருக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் இராம்மோகன் திட்டக்குழுவின் இயக்குநராகப் பணியாற்றினார். இரண்டாவது மகன் கிருஷ்ணமூர்த்தி தாய்-தந்தையைப் போல ஒரு மருத்துவர்.

**தமிழ்ப் பணிகள்**

இந்திமொழிக் கிளர்ச்சியில் பங்குபெற்றார். தமிழிசை இயக்கம், தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்களின் ஊதிய உயர்வுப் போராட்டம் எனத் தமிழ்ப் பணிகள் செய்தார்.

மாதர் இந்திய சங்கம் நடத்திய பெண்களுக்கான 'ஸ்திரீ தர்மம்' என்னும் மாத இதழின் ஆசிரியராக விளங்கினார்.

**சமூகப்பணி**

1926-ஆம் ஆண்டு 43 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட அகில உலகப் பெண்கள் மாநாடு, பிரான்சு நாட்டுத் தலைநகர் பாரீசில் நடைபெற்றது. அதில் இந்தியாவின் சார்பில் முத்துலட்சுமி ரெட்டி கலந்து கொண்டார். அப்போது அவர் நிகழ்த்திய செற்பொழிவில், ***"ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் முன்னேற வேண்டும். பெண்களை அடிமைகளாக நடத்தும் வழக்கம் ஒழிய வேண்டும்"*** என்று வலியுறுத்தினார்.

அன்றைய சென்னை மாகாண சட்டசபைக்கு முத்துலட்சுமி தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் மூலம் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி என்ற பெருமை பெற்றார்.

1925ஆம் ஆண்டு சட்டசபைத் துணைத்தலைவராகத் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவி யில் இருந்த ஐந்தாண்டுளில் சில புரட்சி சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

அவற்றில், தேவதாசி முறை ஒழிப்பு, இருதார தடைச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், பால்ய விவாகங்களை தடை செய்யும் சட்டம் போன்ற சில குறிப்பிடத்தக்கவை.

அனாதையாக்கப்பட்ட குழந்தைகளை வளர்த்து அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க உருவானதே அவ்வை இல்லம் அடையாறில் அமைந்துள்ள இதனை அமைத்தவர் முத்துலட்சுமி. சென்னையில் புற்றுநோய் மருத்துவமனை அமைக்க பலவிதங் களிலும் நிதி திரட்டினார். இன்று புற்று நோயாளிகளுக்குப் புகலிடமாக விளங்கும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்குப் பிரதமர் நேரு 1952ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அடிக்கல் நாட்டினார்.

**விருதுகள்**

முத்துலட்சுமியின் சேவைகளுக் காக மத்திய அரசு பத்ம பூஷண் விருது கொடுத்து கௌரவித்தது.

**மறைவு**

முத்துலட்சுமி (Dr Muthulakshmi Reddy) 1968-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22-ஆம் தேதி மறைந்தார்

**ஜூலை 30ஆம்நாள்**
**முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின்**
**பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றது**

Δ

# பரிதிமாற்கலைஞர்

**எஸ். கார்த்திகேயன்,**
இரண்டாமாண்டு நுண்ணுயிரியியல் துறை



பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், ஜுலை 6, 1870 - நவம்பர் 2, 1903) தமிழறிஞரும், நூலாசிரியரும், தனித்தமிழ் இயக்கத்தில் முதன் மையான பங்கு வகித்தவர்களில் ஒருவரும் ஆவார். இவர் உயரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். நாடகப் புலமை சான்றவர். “தமிழ் மொழி வரலாறு“ போன்ற ஆய்வு நூல்களையும், கலாவதி, ரூபாவதி போன்ற நாடக நூல்களையும், நாடக இலக்கணமான நாடகவியலையும் இயற்றிவர்.

இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சூரியநாராயணன் என்பது. பின்னாளில் சூரியநாராயண சாஸ்திரியர் என்று அழைக்கப்பட்ட இவர், தமிழ் மேல் கொண்ட பற்றினால் தனது பெயரை வடமொழி கலக்காத தூய தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக்கொண்டார்.

மதுரை அருகே விளாச்சேரி எனும் ஊரில் கோவிந்த சிவன் -- லட்சுமி அம்மாள் தம்பதியர்க்கு மகனாக இவர் பிறந்தார். வடமொழியை தந்தையாரிடமும், தமிழை மதுரை சபாபதி முதலியாரிடமும் கற்றார். இளவயது முதலே தமிழ் மொழியின் மீதும், இலக்கணத்தின் மீதும், இலக்கியத் தின் மீதும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த வர் பின்னாளில் இளங்கலை பட்டப்படிப்பில் தமிழ்மொழியிலும், மெய்யியலிலும் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறினார்.

தமிழ்மொழியின் வரலாறு மற்றும் நாடகவியல் (நாடகங்களுக்கான இலக்கணம்) உட்பட பல நூல்களை எழுதினார்.கலாவதி (1898), ரூபாவதி என்ற நாடக நூல்களை எழுதி தாமே கலாவதி, ரூபாவதி எனும் பெண் பாத்திரங் களில் நடித்தார் . இராவ் பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் திராவிட சாஸ்திரி என சிறப்பிக்கப்பட்டார். தனக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர் சபாபதி

முதலியாரிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார் . அவர் 1898இல் மறைந்தார். 33 ஆண்டுகளே இவர் வாழ்ந்தார்.

### இவரது நூல்கள்

தமிழக அரசு இவரது மரபுரிமையாளர் 19 பேருக்கு ரூபாய் 15 லட்சம் பரிவுத் தொகையாக அளித்து இவரது பதின்மூன்று நூல்களும் 2006 டிசம்பர் 2 அன்று தமிழக அரசால் அரசுடமையாக்கப்பட்டன.

பரிதிமாற் கலைஞர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத் தக்க நூல்கள் பின்வருமாறு:

1.ரூபவதி
2.கலாவதி
3.மான விஜயம்
4.தனிப்பாசுரத் தொகை
5.பாவலர் விருந்து
6.மதிவாணன்
7.நாடகவியல்
8.தமிழ் விசயங்கள்
9.தமிழ் மொழியின் வரலாறு.
10.சித்திரக்கவி விளக்கம்

### பதிப்பித்த நூல்கள்

1.சயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி (1898)
2.மகாலிங்கையர் எழுதிய இலக்கணச் சுருக்கம் (1898)
3.புகழேந்திப்புலவரின் நளவெண்பா (1899)
4. உத்தரகோச மங்கை மங்களே சுவரி பிள்ளைத்தமிழ் (1901)
5.தனிப்பாசுரத்தொகை (1901)

**ஜூலை 6ஆம்நாள்**
**பரிதிமாற்கலைஞரின்**
**பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றது**

Δ

# ஆடாதொடை

**திருமதி. லோ. புனிதவள்ளி**
தமிழ் விரிவுரையாளர்

ஆடாதொடையின் இலைகளைப் போல் மலரும் மருத்துவ நலனைக் கொண்டது. எளிதில் எங்கும் கிடைக்கும்.

இதன் பூவை வதக்கி இரவில் துயில்வதற்கு முன் கால்கள் மீது வைத்துக் கட்டி காலையில் எடுத்துவிடவேண்டும். உடம் வெப்பத்தால் ஏற்பட்ட கண்ணோய்கள் எளிதில் நீங்கி விடும்.

கர்ப்பிணிகளுக்கு ஐந்தாவத மாதத்தில் வயிறு வலித்தால் ஆம்பல் பூவும் விளாமிச்சம் வேரும் அரைத்து ஆவின் பாலில் கலந்து காய்ச்சிக் குடிக்கத் தீரும்.

Δ

# உணவே மருந்து

க. மலர்விழி,
முதலாண்டு தமிழ்த்துறை

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு. தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக்கூடிய சஞ்சீவி மருந்தாகக் கருதப்படுகின்றது. இயற்கை உணவு முறையினையும் இயற்கையோடு இயைந்த பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிப்பதன் வழியாக உடல் நலத்தையும் உளநலத்தையும் பாதுகாக்க முடியும் என மருத்துவர் பரிந்துரைக்கின்றனர்.

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையை,

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்" – குறள் -942.**

என்று திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைத் துள்ளார்.

அன்றாடச் சமையலில் கூட்டு வனவற்றுள் மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்துமல்லி பித்தத்தைப் போக்கும். சீரகம் வயிற்றுச் சூட்டைத் தணிக்கும். மிளகு தொண்டைக் கட்டைத் தொலைக்கும். பூண்டு வயிற்று வலியை நீக்கிப் பசியைத்தூண்டும். வெங்காயம் குளிர்ச்சி தந்து குருதியைத் தூய்மைப்படுத்தும். பெருங்காயம் வாயுவை வெளியேற்றும். இஞ்சி உணவின் செறிமானத்திற்கு உதவும். கறிவேப் பிளை உணவுக்கு மணமூட்டும்.

திருமூலர் உடலைக் காக்கும் விதம் குறித்து,

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"**

என்று குறிப்பிட்டுள்ளார்.

கவிமணி எளிய உடற்பயிற்சியின் நல்ல விளைவுகள் குறித்து,

**"காலை மாலை உலாவி நிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத் தொட்டுக் கும்பிட்டுக்**
**காலன் ஓடிப்போவானே"**

என்று சுட்டியுள்ளார்.

இன்றைய நாளில் அட்டைப் பெட்டிகளிலும் தாள் பைகளிலும் பதப்படுத்தி அடைக்கப்பட்ட ஆயத்த உணவு வகைகள் வழக்கத்திற்கு வந்துள்ளன. உணவே மருந்து என்ற நிலை மாறி மருந்தே உணவு என்ற நிலைக்கு நம்மை இட்டுச் சென்றுவிட்டன.

Δ

கவிதை

# முகவரியைத்தேடி

கா. நித்யா,
இரண்டாமாண்டு தமிழ்த்துறை

“நான் பெருமைப்படுகின்றேன்
தமிழகத்தில் தமிழனாய்ப்
பிறந்ததற்காக!

தமிழனே!
சேவல் கூவ எழுந்த நீ
மணி ஒலிக்க எழுந்தாய்
மகிழ்ச்சி.

அன்று சேவலின் கூவலுக்குச்
செவிகொடுத்த நீ
இன்று வறுமையின் குமுறலுக்குச்
செவிகொடுக்காததேன்?

தமிழா! உனது வாழ்வு
பட்டினி கிடப்போருக்கிடையே
பலப் பரீட்சையானது ஏன்?

புறநானூறு கூறுகின்ற செல்வத்தைக்
கொள்ளையடித்தது யார்?
பாரதம் போற்றிய – உன்
பண்பாட்டைப் பறிகொடுத்தது
எங்கே?

தமிழா!
உன் காற்றுப்புகும்
ஆடையை விடுத்துக் கண்டதையும்
அணிந்து கொள்வது ஏன்?

தமிழ் என்னும் அமிழ்தை
மொழியாகக் கொண்ட நீ
ஆங்கில மோகத்தால்
அவலப்பட்டுக்கிடப்பதேன்?

நீ நினைத்தால் தமிழகத்தில்
வெள்ளியால் சல்லி செய்து
தங்கத்தால் தார் செய்து
சாலை போடலாம்!

வாலோடு பிறந்தான் என்கின்றது
அறிவியல் – வாளோடு பிறந்தான்
என்கின்றது புறநானூறு.

நினைவுகொள் தமிழா!
கடல்கடந்து கப்பம் வசூலித்த
வரலாற்றுப் பெருமை உனக்குண்டு.

உன்னிடம் என்ன இல்லை?
நீ எதனைத்தேடி அழைகின்றாய்?

நான் அலைகின்றேன் -
புறநானூறு கூறுகின்ற தமிழனின்
முகவரியைத்தேடி.

∆

# மலர் மணம்

**ஜெ. பாரதி,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை

மலருக்கு வாசைன அதன் இதழ்களில் உள்ளது. சில எண்ணெய்ச் சத்துக்களால் உண்டாகின்றது. செடி அல்லது மரம் வளரும்போது இந்த எண்ணெய்ப் பொருள்கள் உருவாகின்றன.

இந்த எண்ணெய்களை ரசாயன முறைப்படி அலசிப் பார்த்தால் இவை மிகவும் சிக்கலான தன்மைகொண்டமை என்பது புலனாகும்.

சில நேரங்களில் இந்த எண்ணெய்ப் பொருட்கள் தானாகவே அமைப்பில் சற்று எளிமையாகி ஆவியாகி விடுகின்றன. அப்போதுதான் மலரில் மணம் வெளிப்படுகின்றது. ஒரு மலரின் மணப்பதற்கு ஆதாரமாக அம்மலர் கொண்டுள்ள எண்ணெய்களின் கலவையை அமைகின்றது. வெவ்வேறு கலவைகள் வெவ்வேறு மணங்களை உண்டாக்குகின்றன.

இந்த எண்ணெய்ப் பொருட்கள் மலரில் மட்டுமே இருப்பதில்லை. இலை, பட்டை, வேர், விதையில் கூட உண்டு. ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களிலும் யூகலிப்டஸ் மரத்தில் இலையிலும் பாதம் விதையிலும் இத்தகைய நறுமணம் உள்ளது.

Δ

## *கருவறையில் என் உலகம்*

"உருவம் இல்லை என்றாலும்
உணர்வுண்டு எனக்கு.

கண்மூடி நானிருக்க
கண்திறந்து கனவுகண்டால்
என் அன்னை.

என்நேரமும் நான் உறங்க
உறக்கமில்லாமல் தவித்தால்
என் அன்னை.

பலகாலம் நான் வாழ
பத்துமாதம் காத்திருந்தால்
பொறுமையுடன்.

நான் வெளிவருகையில்
உணர்ந்தேன் - வெளியுலகத்தை
விடச் சிறந்தது கருவறையில்
என் உலகம் என்று."

**பு. காஞ்சனா**
முதலாண்டு வேதியியல் துறை

Δ